# சங்க இலக்கியத்தில் பரதவர்களின் பழக்கவழக்கமும் பண்பாட்டு நிகழ்வுகளும்

**முனைவர் கோ.பாலமுருகன்**
**விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு,**
**மதுரை - 625 234.balatphd@gmail.com**

71

சங்க காலத்தில் வாழ்ந்த குறிப்பாக கடலும் கடல் சார்ந்த பகுதியினைத் தங்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாகவும், வாழும் இடமாகவும் கொண்டு வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டவர்கள் நெய்தல் நில மக்கள். இம்மக்களினத்தைப் 'பரதவர்கள்' என்று பண்டைய அகச்செய்யுட்கள் சுட்டிச்செல்கின்றன. கடல் மேற்சென்று மீன் வேட்டம் செய்வதனை முதன்மைத் தொழிலாகக் கொண்ட இப்பரதவர்களின் வாழ்க்கை முறைகளில் காணலாகும் பழக்க வழக்கங்களையும் அதன்வழி வெளிப்படுகிற பண்பாட்டு நிகழ்வுகளையும் எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கம் ஆகும்.

தனி மனிதனின் நடத்தையைப் பழக்கம் எனவும், குழுவிலுள்ள பலருடைய மனஎழுச்சி, உணர்ச்சி ஆகியவற்றுடன் இணைந்து நிற்பதை வழக்கம் எனவும் குறிப்பிடலாம். சுருக்கமாகச் சொன்னால் பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். மக்களின் பழக்கவழக்கங்களே நாளடைவில் பண்பாக பண்பாடாக மாறுகின்றது. அவ்வகையில் 'பழக்கவழக்கமும் பண்பாடும்' என்பதன் கீழ்ப் பரதவ இன மக்களிடம் காணப்படுகின்ற, குறிப்பாக தமிழர்களுக்கே உரித்தான ஒரு பாரம்பரிய தன்மையான விருந்தோம்பல் தன்மையிலிருந்து தொடங்கி விளக்குஏற்றுதல், நோன்புநோற்றல், இல்லினை எழில்படுத்துதல், ஈகைத்தன்மை, பங்கீட்டுக்கொள்ளும் பாங்கு, பழையன கழிதல், பௌர்ணமி நாளில் மீன்பிடிக்கச் செல்லாமை போன்ற இம்மக்களின் வாழ்க்கை முறைகளில் காணப்படுகிற பழக்கங்கள் பற்றிய செய்திகளையும், மேலும், இம்மக்களிடையே நடைமுறையில் இருந்த விழாக்கள், விளையாட்டுக்கள், திருமண உறவுகள் ஆகியன பற்றி கருத்தாக்கங்களைப் புலவர்கள் பதிவுசெய்த சங்கப்பாடல்களின் வாயிலாக எடுத்துரைப்பதாகவும், அக்கருத்தாக்கங்களின் வழி வெளிப்படுகிற ஆடவர் மற்றும் மகளிரின் நடத்தை முறைகள் மற்றும் குணநலன்களையும், இந்நடத்தை மற்றும் குணநலன்கள் வாயிலாக தெளிவுறுத்தப்படுகிற இச்சமூகம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளையும் ஆய்ந்து எடுத்துரைக்கும் நோக்கிலும் இவ்வாய்வு அமையவுள்ளது. மேலும், திருமணம் என்ற உறவு எந்தெந்த நிலைகளில் நெய்தல் நிலத்தில் நடைபெற்றது என்பதையும், அகமணம் - புறமணம் என்பதில் பெரும்பான்மையாக நடைமுறையில் இருந்த மணமுறை பற்றியும், பரதவ சமுகத்தில் திருமணங்கள் நடைபெற்ற முறைமைகள் குறித்தும், அதன் வழி வெளிகாட்டப்படுகிற இச்சமூக மக்களின் பண்பாட்டுக் கூறுகளையும் ஆராய்ந்து தெளிவுறுத்துவதாகவும் இக்கட்டுரை அமையவுள்ளது.

**முன்னுரை**

கடலும் கடல் சார்ந்த பகுதியினைத் தங்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள் நெய்தல் நில மக்கள். அம்மக்களைச் சங்க இலக்கியங்கள் பரதவர்கள் எனப் பகர்கின்றன. இந்நிலமக்களின் பழக்கவழக்கங்களையும், அதன்வழி வெளிப்படுகிற பண்பாட்டுக் கூறுகளையும் சங்கப்புலவர்கள் பதிவுசெய்த பாடல்களின் அடிப்படையில் ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இப்பகுதி அமைகின்றது.

**பழக்கவழக்கமும் பண்பாடும்**

தனி மனிதனின் நடத்தையைப் பழக்கம் எனவும், குழுவிலுள்ள பலருடைய மனஎழுச்சி, உணர்ச்சி ஆகியவற்றுடன் இணைந்து நிற்பதை வழக்கம் எனவும் குறிப்பிடலாம். சுருக்கமாகச் சொன்னால் பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். மக்களின் பழக்கவழக்கங்களே நாளடைவில் பண்பாக பண்பாடாக மாறுகின்றது. அவ்வகையில், நெய்தல் நிலத்தாரிடம் சில பழக்கவழக்கங்கள் காணப்பெற்றுள்ளமையினைப் புலவர்கள் தம்முடைய பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.

**விருந்தோம்பும் பண்பு**

விருந்தோம்பல் பண்பு என்பது தமிழர்களுக்கே உரித்தான ஒரு பாரம்பரிய பண்பு. ஒவ்வொரு தமிழனின் குருதியிலும் ஊறிய சிறப்பான குணநலன் என்பதே சாலப்பொருந்தும். அந்த வகையில், சங்க காலத்தில் வாழ்ந்த மக்களிடையே இப்பண்பு புரையோடியிருந்தமையைச் சங்கப்பாடல்கள் புலப்படுத்தி நிற்கின்றன. அவற்றுள் நெய்தல் நில மக்கள் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளனர். புதிதாக அறிமுகம் இல்லாத நபர்களை முகம்கோணாமல் வரவேற்று, அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்து, இளைப்பாறிச் செல்ல விடுப்பதே விருந்தினரை உபசரிக்கும் பண்பு ஆகும். அதனால்தான் வள்ளுவப் பெருந்தகை ‘விருந்து ஓம்பல்’ என்னும் அதிகாரத்தினை வைத்துள்ளார். இவற்றுள் நெய்தல் நில மக்களுக்கென்று பொருந்தக்கூடிய ஒரு குறட்பா ஒன்றுண்டு. அது,

**“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு”                    (குறள்.86)**

என்பதாகும். ஈங்கு, பரதவர்கள் வந்த விருந்தினர்களை மட்டுமல்லாது வரவிருக்கும் விருந்தினர்களுக்காகக் காத்திருக்கும் பண்பு காணப்படுமாற்றை,

**“பலர்புகு வாயி லடைப்பக் கடவுநர்**
**வரூவீ ருளீரோ வெனவும்….”                    (குறு.118)**

என்று தினமும் விருந்தினர்கள் பலர் புகுகின்ற இல்லறத்தினை அடைப்பதற்கு முன்னர் இன்னும் யாரேனும் இல்லிற்கு வெளியில் இருக்கிறீர்களா? என வினவும் பண்பினை நன்னாகையார் என்ற புலவர் பதிவு செய்துள்ளார். மேலும்,

**“வரையாத் தாரம் வருவிருந்து அயரும்**

**தண்குடி வாழ்நர் அங்குடிச் சீறூர்"** **(நற்.135)**

எனவரும் கதப்பிள்ளையாரின் மொழிவும், பரதவ இன மக்கள் அனைவரிடமும் வருவிருந்து அயரும் பண்பு காணப்படுகின்ற தன்மையினைத் தெளிவுறுத்துகிறது.

**விளக்கேற்றல்**

விளக்கேற்றல் என்பது மின்சாரம் இல்லா அக்காலகட்டத்தில் இருந்தமையில் வியப்பில்லை. இருப்பினும் இந்நில மக்கள் இருளினைப் போக்குவதற்காக மட்டுமன்றி, மாலை நேரத்தினை வரவேற்கும் பொருட்டும் விளக்கேற்றியுள்ளனர்.

**"பகல்கெழு செல்வன் குடமலை மறையப்**
**புலம்புவந்து இறுத்த புன்கண் மாலை**
**இலங்குவளை மகளிர் வியல்நகர் அயர**
**மீன்நிணம் தொகுத்த ஊன்நெய் ஒண்சுடர்"** **(நற்.215)**

என்ற மதுரைச் சுள்ளம்போதனாரின் பாடலடிகள், நெய்தல் நில இல்உறை மகளிர் மாலை நேரத்தை வரவேற்கும் பொருட்டு, மீனின் ஊனிலிருந்து பெறப்பட்ட நெய்யினால் விளக்கு ஏற்றி வழிபட்டு வரவேற்றமையினைப் பகர்ந்து நிற்கின்றன. மேலும், இவ்விளக்கானது,

**"மீன்நெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய**
**சிறுதீ விளக்கில் துஞ்சும் நறுமலர்"** **(நற்.175)**

என்று 'கிளிஞ்சல்' என்னும் சிப்பியில் ஏற்றியமையினைப் புலவர்கள் பதிவு செய்துள்ளமை குறிக்கத்தக்கது. இவ்விளக்கானது நெய்தல் நிலத்தோடு மிகவும் நெருக்கமான தொடர்புடையதாக மட்டுமின்றி, பரதவர்களின் பண்பாட்டு நிகழ்வினை எடுத்து இயம்புவதாகவும் உள்ளன.

**நோன்பு நோற்றல்**

பரதவ இன மகளிரிடையே நோன்பு நோற்கும் பழக்கம் காணப்பெற்றுள்ளது. ஆனால் எதற்காக நோன்பு இருந்தனர் என்பதற்கான சான்று அறிய இயலவில்லை. நோன்பு இருக்கும் மகளிரை 'படிவ மகளிர்' என்று அழைத்துள்ளனர். இதனை,

**"கடலம் காக்கைச் செவ்வாய்ச் சேவல்**
**படிவ மகளிர் கொடிகொய்து அழித்த"** **(நற்.272)**

எனவரும் முக்கல்ஆசான் நல்வெள்ளையாரின் பாடலடிகள், நோன்பு நோற்கும் மகளிர் அங்கு படர்ந்துள்ள அடும்பின் கொடிகளைக் கொய்துள்ளமையைப் பகர்கின்றன.

**இல்லினை எழில்படுத்தல்**

பொதுவாக ஆடவர்களைக் காட்டிலும் மகளிர்களே தங்களுடைய இல்லத்தினை அழகாகவும், தூய்மையாகவும் வைத்துக் கொள்ள விரும்புவார்கள். இது சங்க காலம் முதல் இன்று வரை நடைபெற்று வருகிற ஒரு பழக்கமாகும். நெய்தல் நில மகளிர் தங்களுடைய சிறுகுடிசைகளை அழகு படுத்துவதற்காகக் கடற்கரைச் சோலையில் மலர்ந்த நெய்தல் மலர்களைப் பறித்து வந்துள்ளனர். இதனை,

**"ஒண்ணுதல் மகளிர் ஓங்குகழிக் குற்ற**
**கண்நேர் ஒப்பின் கமழ்நறு நெய்தல்**
**அகல்வரிச் சிறுமனை அணியும் ….."                (நற்.283)**

என்ற மருதன் இளநாகனாரின் பாடலடிகள், மெய்ப்பித்து நிற்கின்றன. இதேபோல் வீட்டில் கோலம் இட்டு எழில் நயமிக்கதாக ஆக்கிய தன்மையினை காஞ்சிப் புலவனார் (நற்.123) பதிவு செய்துள்ளார். இவ்வாறு பரதவ மகளிர் சங்க காலத்திலேயே தாங்கள் வாழும் இல்லத்தினை எழிலுடன் வைத்துக் கொள்ளும் மனப்பான்மை பெற்றவர்களாக விளங்கியுள்ளனர்.

**ஈகைப் பண்பு**

சிறுகுடியில் வாழும் தன்மை உடையவர்களாய் இருப்பினும், இவ்வினத்தவர்களிடம் பிறருக்குக் கொடுத்து உதவக்கூடிய ஈகைப் பண்புள்ளம் அதிகமாக காணப்பெற்றுள்ளது. தம்மை நாடி வந்தோர்க்கு இல்லையென மொழியாது வந்தோர்க்கு எல்லாம் வாரிவாரி வழங்கும் வள்ளல் தன்மை கொண்டவர்களாய் இருந்துள்ளனர்.

**"பெருங்களந் தொகுத்த உழவர் போல**
**இரந்தோர் வறுங்கல மல்க வீசி"                (அக.30)**

என்ற நெடுஞ்சேரலாதனின் பாடலடிகள், தாம் பிடித்து வந்த மீன்களை இரப்பவர்களுக்கு எல்லாம் வழங்கிய தன்மையினையும்,

**"கானல்அம் படப்பை ஆனா வண்மகிழ்ப்**
**பெருநல் ஈகைநம் சிறுகுடிப் பொலிய"            (நற்.91)**

என்ற பிசிராந்தையாரின் பாடலடிகள், ஒட்டு மொத்த பரதவ மக்களிடம் காணப்படுகிற ஈகைப் பண்பினையும் வெளிக்காட்டுவதாகக் காட்சிப் படுத்தப்பெற்றுள்ளன.

**பகுக்கும் பண்பு**

பரதவர்கள் பொதுவாக மீன்வேட்டம் செல்லும் பொழுது குழுவாகச் செல்லும் பழக்கம் உடையவர்களாக இருந்துள்ளனர். வேட்டம் சென்று பிடித்த மீன்களைக் கடற்கரைக்கு வந்தவுடன் அதனை அனைவரும் பகிர்ந்து எடுத்துச் சென்றுள்ளனர். இப்பண்பு இம்மக்களிடையே காணப்படுகிற ஒற்றுமையுணர்வினை எடுத்து இயம்புவதாக உள்ளது.

**"பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்**
**மோட்டுமணல் அடைகரைக் கோட்டுமீன் கெண்டி**
**மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்"            (அக.10)**

என்ற அம்மூவனாரின் பாடலடிகள், மீன்களைப் பகுத்த இயல்பினையும்,

**"கண்டிரண் முத்தங் கொண்டு ஞாங்கர்த்**
**தேனிமிர் தண்கரைப் பகுக்குங்**
**கானலம் பெருந்துறைப் பரதவர் னமக்கே"(அக.280)**

என்ற அம்மூவனாரின் மொழிவு, முத்துக்களைப் பகுத்துக்கொண்ட நிகழ்வையும் வெளிக்காட்டுவதிலிருந்து, இப்பரதவர்களிடையே கிடைத்ததைப் பகுத்துக் கொண்டு வாழும் தன்மை

படைத்தவர்களாக உள்ளமையைத் தெளிவுபடுத்தகிறது.

**பழையன கழிதல்**

பழையனவற்றை, பயன்தராதனவற்றைக் கழித்து விடும் பண்பு இம்மக்களிடையே காணப்படுகிறது. அதற்குக் காரணம் இவர்களுடைய தொழில் முறைகளே ஆகும். பரதவர், உமணர் என்ற இரு இனத்தாரிடையேயும் இப்பழக்கம் காணப்படுகிறது. பரதவர்கள் தாங்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய தோணி, அம்பி போன்ற மரக்கலன்கள் பழைய நிலை அடைந்தவுடன் அதனைப் புன்னை மரத்தின் அடியில் பிணித்து வைத்துவிடும் பழக்கம் கொண்டவர்களாய் இருந்துள்ளனர். பின்பு அதனைப் பயன்படுத்தார்.

**"ஈண்டுபெருந் தெய்வத்து யாண்டுபல கழிந்தெனப்**
**பார்த்துறைப் புணரி அலைத்தலிற் புடைகொண்டு**
**மூத்துவினை போகிய முரிவாய் அம்பி**
**நல்எருது நடைவளம் வைத்தென உழவர்**
**புல்லுடைக் காவில் தொழில்விட் டாங்கு**
**நறுவிரை நன்புகை கொடாஅர் சிறுவீ " (நற்.315)**

எனவரும் அம்மூவனாரின் பரத்தை கூற்றுப் பகர்வு, பழைய மரக்கலத்தினைப் புன்னையின் அடியில் பிணித்து வைத்துவிட்டு, அதற்கு நறுமணப் புகைகாட்டல் போன்ற செயல்களைச் செய்யாமல் விடுப்பதை உணர்த்துவதிலிருந்து இதனை அறிந்து கொள்ள முடியும்.

இதேபோல், உப்பு வணிகராகிய உமணர்கள் தாங்கள் உப்பு ஏற்றிச் செல்லப் பயன்படுத்தும் எருது பூட்டிய வண்டி பழுதடைந்த பொழுது அதனை அப்படியே அவ்விடத்தில் விட்டுச் செல்வர்

**"கணங்கொள் உமணர் உயங்குவயின் ஒழித்த**
**பண்அழி பழம்பார் வெண்குருகு ஈனும்" (நற்.138)**

என்ற அம்மூவனாரின் மொழிவு, உமணர் விட்டுச் சென்ற வண்டியில் குருகினங்கள் முட்டையிட்டு வைத்த செய்தியைப் புலப்படுத்துவதிலிருந்து இதனை அறிந்து கொள்ள இயலும். மேலும், இவ்வண்டியினை இழுக்கும் எருதுகள் மூப்படைந்து விட்டால் அதனையும் அப்படியே காட்டில் விட்டுச் செல்லும் பாங்கும் காணப்படுவதை,

**"நீரும் புல்லும் மீயாது துமணர்**
**யாருமி லொருசிறை முடத்தொடு துறந்த" (புற.307)**

எனவரும் புறநானூற்றுப் பாடலடிகள், தெளிவுறுத்திக்காட்சிப்படுத்துகின்றன. இந்த நிலையில் பார்க்கும்போது இந்நிலத்தில் வாழ்ந்த மக்களும், இந்நிலத்தோடு தொடர்புடைய உமணர்களும் தொழிலின் பொருட்டுப் பழையன கழிதல் என்ற பண்பினைக் கொண்டவர்களாக உள்ளனர் என்பது தெளிவாகிறது.

**முழுமண்டில நாளில் மீன்பிடிக்கச் செல்லாமை**

பரதவர்கள் பகல், இரவு என இருவேளைகளிலும் மீன் வேட்டம் செல்லும் பழக்கம்

உடையவர்கள். இவற்றுள் முழு நிலவு தோன்றும் பௌர்ணமி நாளன்று இரவில் மீன்பிடிக்கச் செல்வதில்லை. அன்றைய தினம் கடல் அலையின் வேகம் அதிகமாகக் காணப்படும். இதனை இப்பரதவர்கள் நன்கு அறிந்து வைத்திருந்திருக்கின்றனர்.

**"……………………….. பெருங்கடல்**
**இரவுத்தலை மண்டிலம் பெயர்ந்தென உரவுத்திரை**
**அறிவன போல வரூஉம்" (நற்.375)**

என்ற மொழிவு, பௌர்ணமி நாளில் அலைகள் ஆர்ப்பரித்து எழுகின்ற செயலினைப் புலப்படுத்துகின்றன. இவ்வாறு இந்நாளில் கடல் அலைகளின் சீற்றம் ஏற்படுவதற்குக் காரணம் அமாவாசையில் சூரியனுடன் 0 டிகிரியில் இணைந்த சந்திரன் தினமும் 12 டிகிரியில் நகர்ந்து கொண்டே சென்று 15ஆம் நாளான பௌர்ணமி அன்று 180 டிகிரி நிலையினை அடைகிறது. இந்த நிலையில் சூரியனுக்குச் சமமான புவிஈர்ப்புச் சக்தியை வெளிப்படுத்துகிறது. ஆதலால் கடலில் அலைகள் அதிகமாகத் தோன்றுகின்றன. இதன் காரணமாக பௌர்ணமி நாட்களில் இந்நில மக்கள் இரவில் மீன்வேட்டம் செல்வதில்லை.

**விழாக்கள்**

மக்களின் வாழ்க்கையில் விழாக்கள் தோன்றுவதற்குக் காரணம் மனிதன் தன் இயல்பான பணிச்சுமையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, இன்பமான சூழ்நிலைக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் பொருட்டுத் தோற்றுவிக்கப்பட்டது ஆகும். இது ஒரு வகையில் மக்களின் நம்பிக்கை சார்ந்த நிகழ்வாகவும், பண்பாட்டினை எடுத்தியம்பும் கருவியாகவும் கொள்ள வாய்ப்புண்டு. நெய்தல் நில மக்களிடையே இன்ன விழாதான் நடைபெற்றது என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்குச் சான்றுப் பதிவுகள் இடம்பெறவில்லை. ஆனால், விழாக் கொண்டாடியமைக்கான நிகழ்வுகள் சுட்டப்பட்டுள்ளன. விழா நாளில் ஆடுமகளிர் பலவகையான அணிகலன்கள் அணிந்தமை, பரதவ மகளிருள் இளையவர் (தலைவியின் தங்கையர்) தழையாடை அணிந்து மீன்விற்கச் சென்றமை, ஊரே சேர்ந்து மாலை நேரத்தில் விழாக் கொண்டாடி மகிழ்வுற்றிருந்தமை ஆகியன சுட்டப்பெற்றுள்ளன.

**"நிலவே நீல்நிற விசும்பில் பல்கதிர் பரப்பி**
**பால்மலி கடலின் பரந்துபட் டன்றே**
**ஊரே ஒலிவரும் சும்மையொடு மலிதொகுபு**
**ஈண்டிக்கலிகெழு மறுகின் விழவய ரும்மே" (நற்.348)**

எனவரும் வெள்ளிவீதியாரின் பாடலடிகள், நிலவொளியில் மக்கள் அனைவரும் விழாக் கொண்டாடி மகிழ்ந்த செய்தியினை வெளிக்காட்டி நிற்கின்றன.

**விளையாட்டுக்கள்**

சங்க காலப் புலவர்கள் தலைவன் - தலைவி என்ற இரு மாந்தர்களுக்கு இடையேயான காதல் உறவுகளை, எடுத்தியம்பும் பொருட்டு இயற்றப்பட்ட அகப்பாடல்கள், அம்மாந்தர்களின் அல்லது அச்சமூக மக்களின் வாழ்க்கைக் கூறுகளைப் பிரதிபலிப்பதாக உள்ளன. மக்களின் வாழ்க்கைக்

கூறுகளுள் ஒன்றான விளையாட்டு நிகழ்வுகளைப் பதிவுசெய்த புலவர்கள், அவற்றின் வாயிலாக அம்மண் தொடர்பான பண்பாட்டுக் கூறுகளையும் பதிவுசெய்ய முற்பெற்றுள்ளனர்.

**விளையாட்டுக்களின் தோற்றம்**

விளையாட்டு என்பது மனிதனை மகிழ்வுபடுத்தும் ஒரு பொழுதுபோக்கு நிகழ்வாக இருப்பினும், அதன் வழியாகப் பல பண்பாட்டு நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளமை புலவர்களின் நுண்ணறிவினை வெளிப்படுத்தும் வகையில் உள்ளன. “வாழ்க்கையே ஒரு போராட்டமாக இருந்த முற்கால மனிதனுக்கு அதுவே பல படிப்பினைகளைக் கற்றுத்தந்தது. அந்த அனுபவம் அவனுக்கு இயற்கையைப் புரிந்து கொள்ளவும் சமாளிக்கவும் சக்தியைத் தந்தது எனலாம். தற்காப்புக்காகத் தாண்டினான்; ஓடினான்; நீந்தினான்; மரமேறினான்; கண்விழித்தான்; கையில் கிடைத்தவற்றை வைத்துக்கொண்டுப் போராடினான்; நாடோடி வாழ்க்கையை விட்டுவிட்டு நிலைத்த வாழ்க்கைக்கு வந்தடைந்தபோது தனித்த வாழ்க்கை, குழுவாழ்க்கையைப் புரிந்து கொண்டு செயல்பட்டான். அப்பொழுது அவன் பெற்ற பயிற்சி அவனது வீரத்தைப் புலப்படுத்த வகை செய்தது. வீரத்தை வளர்க்க, பயத்தை விரட்ட, நம்பிக்கையை ஊட்ட, நண்பர்களைப் பெருக்க, பொழுதுபோக்கை வரவேற்க, முரண்பாட்டை உணர்த்த, வாழ்க்கையினையும், தொழிலினையும் எதிரொலிக்க, போலச் செய்ய எனப் பல நிலைகளில் விளையாட்டுக்கள் தோன்றலாயின” என்று விளையாட்டுக்கள் தோற்றம் பெற்ற இயல்பினைச் சுட்டுவர். மேலும் “விளையாட்டு மனிதனின் உடன் பிறப்பு ஆகும். மனித சமுதாயம் எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு தொன்மையானது அச்சமுதாயம் ஆடிய விளையாட்டும் ஆகும். மனிதன் இனக்குழுவாக ஒன்று சேர்ந்து வாழத் தலைப்பட்ட போதே விளையாட்டு ஒரு சமுதாய நிறுவனமாகக் கால் கொண்டிருக்க வேண்டும். அதுமுதல் விளையாட்டு சமுதாயத்தை இயக்கியும் ஊக்கியும் ஒழுங்குபடுத்தியும் வருகின்றது.” இதிலிருந்து விளையாட்டு என்பது மனிதனிலிருந்து அவனுடைய இயல்பான நடவடிக்கைகள் செயல்களிலிருந்து இயற்கையாக உருப்பெற்று, கருக்கொண்டது என்பது தெளிவாகிறது. காலப்போக்கில் இதுவே மனிதயினத்தின் பண்பினைப் புலப்படுத்துதற்குக் களனாக அமைந்தது.

விளையாட்டு என்ற ஒரு நிகழ்வு மனிதனின் குழந்தைப் பருவம் தொடங்கி முதிர்பருவம் வரை தொடர் பயணம் மேற்கொள்வதைக் காணமுடிகிறது. கடலும் கடல்சார்ந்த பகுதியான நெய்தல் நிலத்தில் விளையாட்டுக்கள் இளஞ்சிறார் பருவம் தொடங்கி மணமான பருவம் வரையுள்ள அனைத்துத் தரப்பினரின் வாழ்விலும் பங்கு கொண்டுள்ளது.

சிறார்களின் விளையாட்டுக்கள் பொதுவாக அந்நிலம் சார்ந்த மக்களின் தொழில், குடும்பம், பண்பாடு, உறவு போன்ற வாழ்க்கைக் கூறுகளின் நிகழ்வுகளை வெளிப்படுத்தும் வகையில் ‘போலச் செய்தல்’ வகையில் வெளிப்படுவதாக இருக்கிறது. நெய்தல் நிலத்தில் உள்ள சிறார்களின் விளையாட்டு பெரும்பாலும் இருவர் அல்லது பலர் இணைந்து ஆடும் குழுவிளையாட்டுக்களாகவே உள்ளன. இவர்களின் விளையாட்டுக் களமாக வீட்டு முன்றில், கடற்கரை உப்பங்கழி, மணல்பகுதி, சோலை ஆகிய பகுதிகள் இருந்துள்ளன.

**இளஞ்சிறார் விளையாட்டுக்கள்**

நம்முடைய பண்பாடு என்பது பெரும்பான்மையாகப் பெண்ணை மையமாக வைத்துப் பதிவு செய்யப்பெற்றுள்ளமையை இலக்கியங்கள் சுட்டுகின்றன. பெண்மையை மையப்படுத்துவதற்குக் காரணம் அகத்தில் பெண்கள் முதன்மையான இடத்தை வகிப்பதே ஆகும். அந்த வகையில் நெய்தல் நிலத்தில் பெண்பாலார் விளையாட்டுக்களே புலவர்களால் அதிகமாகப் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன. பரதவரின இளஞ்சிறுவர் சிறுமியர் சேர்ந்தும் தனித்தனியாகவும் விளையாடி மகிழ்ந்துள்ளனர். சிறார்கள் கடற்கரையின்கண் அமைந்துள்ள கழிமுகப் பகுதிகளில் நுண்வலையினை வைத்துக் கொக்கினைப் பிடித்துப் பொழுது போக்கியுள்ளனர். இதனை,

**“கொழுமீன் வல்சிப் புன்றலைச் சிறாஅர்**
**நுண்ஞாண் அவ்வலைச் சேவல்பட்டெனா”(அக.290)**

என்ற நக்கீரனாரின் பாடலடிகள், உணர்த்தி நிற்கின்றன. இவ்விளையாட்டு இந்நில மக்களின் தொழில் முறையினை வெளிக்காட்டும் வகையில் அமைந்திருப்பது குறிக்கத்தக்கது.

**மணலில் மறைத்தாடல்**

இவ்விளையாட்டு இன்று வரை வழக்கில் உள்ள நிகழ்வாக உள்ளது. கடற்கரையில் கிடைக்கும் சிப்பி, முத்து போன்ற பொருட்களைப் பயன்படுத்தி கடற்கரை மணலில் உட்கார்ந்து விளையாடி மகிழ்ந்துள்ளனர். சங்க காலத்தில் பரதவ இனச்சிறுமிகள் தனது வீட்டின் அருகில் உள்ள மணற்பாங்கான இடத்தில், மணலினைக் குவித்து அதனுள் புன்னை விதையினை மறைத்து வைத்துப் பின்பு அவ்விதையினைக் கண்டுபிடிக்கும் வகையில் விளையாடிப் பொழுதினை மகிழ்வுடன் கழித்துள்ளனர். இதனை,

**“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது நுவ்வைஆகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே” (நற்.172)**

எனவரும் பாடலடிகள், மேற்கண்ட நிகழ்வினை உறுதி செய்யும் வகையில் உள்ளன. இவ்விளையாட்டுச் சிறுமியர்களிடையே வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதாக அமைந்துள்ளனவே தவிரப் பொறாமையை உண்டாக்குவதாக இல்லை. மேலும், இது சிறுமியர்களின் குறித்தறிந்து கண்டுபிடிக்கின்ற திறனை வளர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

**வண்டல் அயர்தல்**

வண்டல் அயர்தல் என்பது கடற்கரையருகினில் காணப்படக் கூடிய வண்டல்மண் நிறைந்த பகுதிகளில் சிறு வீடுகள் கட்டியும், பொய்ச்சோறு ஆக்கியும், பாவைகள் செய்து விளையாடும் நிகழ்வைக் குறிக்கும். பாவை விளையாட்டினைச் சிறுவயதினர் மட்டுமன்றிப் பருவ வயதினரும் விளையாடியுள்ளனர். பாவையினை வண்டல் மணலில் மட்டுமின்றி மரம், கோரைப்புள் போன்றவற்றாலும் செய்துள்ளனர்.

**“சிறுவீ ஞாழல் தேன்தோய் ஒள்இணர்**

**நேர்இழை மகளிர் வார்மணல் இழைத்த**

**வண்டற் பாவை வனமுலை முற்றத்து**

**ஒண்பொறிச் சுணங்கின் ஐதுபடத் தாஅம்"(நற்.191)**

என்ற உலோச்சனாரின் மொழிவு, நெய்தல் நில மகளிர் வண்டல் மணலில் பாவை செய்து விளையாடிய நிகழ்வினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளன.

**"வண்டல் ஆயமொடு பண்டுதான் ஆடிய**

**ஈனாப் பாவை தலையிட்டு ஓரும்**

**மெல்லம் புலம்பன் அன்றியுஞ்**

**செல்வாம் என்னும் கான லானே" (நற்.127)**

எனவரும் சீத்தலைச் சாத்தனாரின் பாடலடிகள், மகளிர் தன்னுடைய சிறுவயதில் பாவை வைத்து விளையாடிய நிகழ்வினை நினைவுகூரும் முகமாக, தற்போது தலைவி தலைவன் இன்றியும் இவ்விளையாட்டினை விளையாடுவாள் எனத் தோழி மொழியும் வகையில் பொருளுரைத்துச் செல்கின்றன. இவ்வாறாக இவ்விளையாட்டு குழந்தைப் பருவம் உள்ளவர்கள் முதல் பருவமடைந்த பெண்கள் வரை உள்ளவர்கள் விளையாடியுள்ளமையினைப் புலப்படுத்தி நிற்கின்றன.

**சிற்றில் இழைத்தல், சிறுசோறாக்குதல்**

இதுவும் குழுவிளையாட்டுக்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நெய்தல் நிலத்துப் பெண்கள் இணைந்து ஒற்றுமையாக விளையாடக்கூடிய நிகழ்வாக இவ்விளையாட்டு நடந்தேறியுள்ளது. இப்பெண்கள் தங்கள் தோழிமார்களுடன் சேர்ந்து கடற்கரைச் சோலையில் உள்ள மணலில் சிறிய வீடுகள் கட்டியும், சோறு ஆக்கியும் விளையாடியுள்ளனர். இதனை,

**"றொடலை ஆயமொடு கடலுட னாடியுஞ்**

**சிற்றி லிழைத்துஞ் சிறுசோறு குவைஇயும்**

**வருந்திய வருத்தந் தீரயாஞ் சிறிது" (அக.110)**

எனவரும் போந்தைப்பசலையாரின் பாடலடிகளின் கருத்து புலப்படுத்துகின்றன. இவ்வகையான விளையாட்டுக்கள் எல்லாம் பெரும்பாலும் குடும்பத் தலைவியர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. பாவைகளைத் தனது மகவாக எண்ணி அதற்கு முலைப்பால் ஊட்டுவது, பொய்ச்சோறு ஆக்கி அனைவரும் பகிர்ந்து உண்பது போன்ற நிகழ்வுகள் கற்பு வாழ்வில் குடும்பத் தலைவியர்கள் மேற்கொள்ளும் பழக்கவழக்கத் தாக்கத்தின் விளைவாக வெளிப்பெற்றுள்ளமையினைக் காட்சிப்படுத்தி நிற்கின்றன.

**திமில்எண்ணி விளையாடல்**

ஒன்று, இரண்டு, மூன்று என்று விரல்விட்டு, விரல்சுட்டி எண்ணி விளையாடும் நிகழ்வைக் குறிக்கும் வகையில் பல விளையாட்டுக்கள் உள்ளன. அவ்வகை விளையாட்டுக்கள் ஈங்கு நெய்தலில் திமில் எண்ணி மகிழும் நிலையில் நடைபெற்றுள்ளன. இவ்வகை விளையாட்டு தனியாகவும், தோழிமார்களுடன் சேர்ந்தும் எண்ணிக்கையை அதிகரித்துப் பெருமைப்பட்டுக் கொள்ளும் அளவில் இவர்களிடையே நடந்துள்ளது. ஈங்கு, உலோச்சனாரின் பாடலடிகள்,

**“மடநோக்கு ஆயமொடு உடன்உப்பு ஏறி**
**எந்தை திமில்இது நுந்தை திமில்என**
**வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்**
**திண்திமில் எண்ணும் தண்கடற் சேர்ப்ப” (நற்.331)**

என்று உப்பங்கழியில் குவித்து வைக்கப்பட்ட உப்புக்குன்றுகளின் மேல் ஏறிநின்று கடற்மேற்சென்று திரும்பும் தன் தந்தைமார்களின் திமில்களை எண்ணி விளையாடிய நிகழ்வைப் புலப்படுத்தி நிற்கின்றன. இதேபோல் இரவில் தன் மனையின்கண் இருந்து கடலில் தெரியும் திமிலின் விளக்கினை எண்ணியும் விளையாடிப் பொழுது போக்கியுள்ளனர்.

**“……………………….மனைஇருந்து**
**இருங்கழி துழவும் பனித்தலைப் பரதவர்**
**திண்திமில் விளக்கம் எண்ணும்” (நற்.372)**

எனவரும் உலோச்சனாரின் பாடலடிகள், மேற்கண்ட நிகழ்வினைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன. இவ்வகை விளையாட்டுக்கள் பொழுது போக்கு நிகழ்வாக இருப்பினும், குறிப்பிட்டவர்களின் வருகையினை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மனநிலையினை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. மேலும் இந்நில மகளிரின் பொறுமைக் குணத்தையும், நம்பிக்கையினையும் வெளிப்படுத்தும் போக்கிலும் அமைந்துள்ளன.

**மகளிர் - ஆடவர் விளையாட்டுக்கள்**

மகளிர் மட்டுமல்லாமல் சில நேரங்களில் ஆடவர்களும் குறிப்பாகத் தலைவன் தலைவியுடன் சேர்ந்தும் விளையாடியுள்ளமையைக் காணமுடிகிறது.

**கடலாடல்**

கடலாடல் என்பது நெய்தல் நிலத்திற்கே உரியதான ஒரு விளையாட்டு. கடலாடல் நிகழ்வினைப் பெண்கள் தனியாகத் தங்களுடைய தோழிமார்களுடன் சேர்ந்தும், தலைவி தலைவனுடன் இணைந்தும் விளையாடி மகிழ்ந்துள்ளனர். மகளிர் தங்களுடைய ஆயர் கூட்டத்துடன் கடற்கரைச் சோலையில் உள்ள பல மலர்களைப் பறித்து சூடிக்கொண்டு கடலிலே நீராடியுள்ளனர். கடலில் படிந்தாடுங்கால் இம்மகளிர் தம்மை கழிமுண்டகப் பூவால் தொடுக்கப்பட்ட மாலையால் ஒப்பனை செய்துகொண்டு ஆடுவர். இது இந்நிலத்திற்கு உரித்தான ஒன்றாகக் கருதப்படுகிறது. இக்கருத்தினைப் புலப்படுத்தும் வகையில் அல்லங்கீரனாரின் மொழிவு,

**“அணிமலர் முண்டகத்து ஆய்பூங் கோதை**
**மணிமருள் ஐம்பால் வண்டுபடத் தைஇத்**
**துணிநீர்ப் பௌவம் துணையோடு ஆடி**
**ஒழுகுநுண் நுசுப்பின் அகன்ற அல்குல்” (நற்.245)**

என்று காட்சிப்படுத்துகிறது. இவ்விளையாட்டு மகளிரின் துணிவினை வளர்க்கும் தன்மையில் உள்ளமை குறிக்கத்தக்கது.

**கானல் ஆடல்**

ISSN:2582-9599



நெய்தல் பாடல்களில் கானல் என்பது கடற்கரைச் சோலையினைக் குறிக்கும் வகையில் கையாளப்பெற்றுள்ளது. இக்கானல் விளையாட்டின் போது இந்நில மகளிர் சோலையில் பூத்துள்ள மலர்களைப் பறித்தும், அம்மலரில் மது அருந்த வரும் வண்டினங்களை ஓட்டியும், பறித்த மலர்களைக் கண்ணியாகச் சூடியும் விளையாடுவர்.

**“நீயும் யானும் நெருநல் பூவின்**
**நுண்தாது உறைக்கும் வண்டினம் ஓப்பி**
**ஒழிதிரை வரித்த வெண்மணல் அடைகரைக்**
**கழிசூழ் கானல் ஆடியது அன்றிக்**
**கரந்துநாம் செய்தது ஒன்று இல்லை” (நற்.27)**

என்ற குடவாயிற்கீரத்தனாரின் பாடலடிகள், தலைவி தோழியுடன் கானலில் விளையாட்டு அயர்ந்தமையைக் காட்சிப்படுத்தி நிற்கின்றன. இவ்விளையாட்டு நெய்தல் மகளிர் இடையே ஒற்றுமையையும் நட்புணர்வையும் வளர்க்கும் தன்மையில் மட்டுமன்றி இவர்களிடையே பொருட்களைச் சேகரிக்கும் பண்பையும், அதனை உரிய வகையில் பயன்படுத்தும் குணநலன்களையும் வளர்க்கும் நிலையில் உள்ளன.

**அலவன் ஆட்டல்**

அலைகள் வீசுகின்ற கடற்கரைப் பகுதியில் ஞெண்டுகள் தனது வளையிலிருந்து வெளிவந்து அங்குமிங்கும் சுற்றித்திரியும். அலைகள் வரும்போது அவற்றிலிருந்து விடுபடும் முயற்சியில் விரைவாக ஓடி வளைக்குள் புகும். இவ்வாறு தொடர் நிகழ்வாக நடைபெறும் இச்செயலினைக் கண்ட நெய்தல் நில மகளிர் தாங்களும் அஞ்ஞெண்டினைப் பிடிக்க முயல்வர். அப்பொழுது வளைக்குள் சென்ற அதனை வளையைத் தோண்டி பிடிப்பர். இவ்வாறு பிடித்து விளையாடி பொழுது போக்கும் நிகழ்வைச் சங்ககாலத்தில் ‘அலவன் ஆட்டுதல்’ என்று அழைத்துள்ளனர். இவ்விளையாட்டினைச் சிறிய வயதுள்ளவர்கள் முதல் பருவ வயதினர் வரை அனைவரும் விளையாடியுள்ளனர்.

**“பொன்னடர்ந் தன்ன வொள்ளிணர்வ் செருந்திப்**
**பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதை**
**அணிமணல் அடைகரை அலவன் ஆட்டி**
**அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமக” (அக.280)**

என்ற அம்மூவனாரின் பாடலடிகள், தலைவி, தோழியுடன் அலவனாட்டி மகிழ்ந்தமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. மேலும், இது இம்மகளிரிடையே மீண்டும் மீண்டும் முயலுகின்ற எண்ணத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. அலவன் ஆட்டுதல் என்பது பெண்கள் தோழிமார்களுடன் இணைந்தும், தலைவி தலைவனுடன் இணைந்தும் விளையாடி மகிழ்ந்துள்ளமையைப் புலப்படுத்துவதிலிருந்து இருபாலரும் இவ்விளையாட்டில் பங்கு கொண்டமையை அறிந்து கொள்ள முடிகிறது.

**ஊசலாடல்**

ஊசல் ஆடல் என்பது மகளிர் விளையாடும் ஆட்டங்களில் ஒன்று. மரக்கிளையில் கயிறுகட்டி,

அந்தக் கயிற்றில் ஒரு இருக்கையினை அமைத்து, அதில் ஒருவர் உட்கார, மற்றொருவர் ஆட்டிவிடுவர். இது பண்டைக் காலத்தில் இருந்து இன்று வரையுள்ள ஒரு ஆட்டமாக இருந்துவருகிறது. நெய்தல் நிலத்தில் உள்ள இந்நிகழ்வானது நெய்தலுக்குரித்தான கருப்பொருட்களோடு பிணைப்பு பெற்றுள்ளமையைப் புலவர்கள் பதிவுசெய்துள்ளனர்.

**“இனமீன் இகன்மாற வென்ற சினமீன்**
**எறிசுறா வான்மருப்புக் கோத்து நெறிசெய்த**
**நெய்தல் நெடுநார்ப் பிணித்துயாத்துக் கையுளர்வின்**
**யாழிசை கொண்ட இனவண்டு இமிர்ந்து ஆர்ப்பத்**
**தாழாது உறைக்கும் தடமலர்த் தண்தாழை**
**வீழ்ஊசல் தூங்கப் பெறின்” (கலி.131;6-11)**

என்னும் இப்பாடலடிகள், இனமீன்களை வென்ற சுறாமீனின் கொம்புகளைக் கொண்டு பலகைசெய்து, தாழை விழுதால் ஆகிய ஊசல்கயிற்றில் பிணைத்துத் தொங்கவிட்டு அதில் நெய்தல் மலரினால் தொடுக்கப்பட்ட மாலையைச் சூட்டி ஆடுகின்ற மரபினை இயம்பி நிற்கின்றன. பெண்களுக்கு மட்டுமான இவ்விளையாட்டில் ஆடவர்களும் கலந்து கொண்டு ஆடியுள்ளனர். இது உடலினை உறுதி செய்வது, மனத்திற்கு மகிழ்ச்சி தருவது, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்ப்பது, உடனிருப்பவர்களுக்கு உதவுவது எனப் பல நிலைகளில் நெய்தல் மகளிரின் நற்பண்புகளை வளர்க்கும் நிலையில் இருந்திருக்கிறது.

**குரவையாடல்**

பண்ட மக்களின் ஆதிநிலைக் கூத்தாகத் திகழ்வது குரவையாகும். முதன்முதலில் குன்றுகளின் உச்சியிலும், கடற்கரை மணலிலும், மரநிழல்களிலும் ஆடப்பெற்றுள்ளது. பெண்கள் மட்டுமே முதலில் ஆடியுள்ளனர். பரதவமகளிர் பலர் மகிழ்ந்து கூடித்தழுவியும், கைகளைக் கோத்தும், கைகொட்டியும், சத்தமிட்டு ஒலியெழுப்பியும், பாடியும் ஆடியுள்ளனர். அகத்தில் குரவையாடல் என்பது பொழுதுபோக்கு, வழிபாடு, காதல் என்ற மூன்று நிலைகளில் ஆடப்பட்டமையை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. குரவையாடுவோர் புனைவு கொண்டு ஆடுவதில்லை.

**“கடலுட னாடியுங் கான லல்கியும்**
**தொடலை யாயமொடு தழுவணி யயர்ந்தும்**
**நொதுமலர் போலக் கதுமென வந்து**
**முயங்கினன் செலினே யலர்ந்தன்று மன்னே” (குறு.294)**

என்ற அஞ்சிலாந்தையாரின் பாடலடிகள், தலைவி தோழியரோடு குரவையாடும் போது தலைவன் வந்து முயங்கிச் சென்றமையை உணர்த்தும் நிலையில் உள்ளன. இந்தக் குரவையாட்டம் பெண்களுக்கிடையே மகிழ்ச்சியை உண்டாக்குவதாகவும், தலைவன் தலைவிக்கிடையே களவு நிகழ்வதற்கு வாய்ப்பாகவும் உள்ளமையைப் புலப்படுத்தி நிற்கின்றன.

இவ்வாறு நெய்தல் நிலத்தில் ஆடப்பட்ட விளையாட்டுக்கள் அனைத்தும் அம்மக்களிடையே காணப்படக்கூடிய பழக்கவழக்கப் பண்பாட்டு நிகழ்வுகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. சிறியவர்

முதல் பருவ வயதுடையோர் வரை உள்ள நபர்கள் அனைவரும் கலந்து கொண்ட இவ்விளையாட்டுக்களில் இயற்கை சார்ந்த மண்ணின் மணம் வீசுவதைக் காணமுடிகிறது. சிறுவர்களின் ஆடல்கள் தங்கள் தந்தையின் தொழிலினை வெளிப்படுத்துவதாகவும், சிறுமிகளின் விளையாட்டுக்கள் தாயின் குடும்ப அமைப்பிலான நிகழ்வுகளை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. இவற்றுள் சில விளையாட்டுக்கள் இச்சமூகம் சார்ந்த பண்பாட்டு; மரபினை எடுத்து இயம்புவதாக உள்ளன. மேலும் இச்சமூக மக்களின் மகளிரின் ஒற்றுமையுணர்வு, பகிர்ந்து கொள்ளும் பண்பு, விட்டுக்கொடுக்கும் பண்பு, சகித்துக் கொள்ளும் குணம் எனப் பல்வேறு வகையான திறன்களை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளாக விளையாட்டுக்கள் உள்ளமையை அறியமுடிகிறது.

**திருமணம்**

ஓர் ஆணும் பெண்ணும் சமூக அங்கீகாரத்துடன் தங்களுக்குள் ஒரு புனிதமான உறவினை ஏற்படுத்திக் கொள்ளும் நிகழ்வே திருமணம் ஆகும். ஒரு சமூகத்திற்குள் "மனித இனம் தன்பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும். உயர் பாலூட்டிகளிடமும் பிற கீழின விலங்குகளிடமும் பாலுறவு ஓர் உயிரியல் செயலாக மட்டுமே நிகழ்கிறது. ஆனால் மனிதர்கள் அடிப்படையில் சமுதாய - பண்பாட்டு விலங்காதலால் அவ்வுயிரியல் செயலைத் 'திருமணம்' என்னும் நிறுவனச் செயலாக்கி அவர்கள் தம்முடைய உயிரியல் உந்துதல்களை நிறைவு செய்து கொள்கின்றனர்" என்பர். அந்த வகையில் நெய்தல் சமூகத்தில் நடைபெற்ற திருமணம் பரதவர்களின் உந்துதல்களை நிறைவு செய்யும் தன்மையில் மட்டுமின்றிப் பண்பாட்டு நிகழ்வுகளை வெளிக்காட்டும் தரவுகளாகவும் அமைந்துள்ளன. நெய்தல் சமூகத்தில் ஒருவர் தாம் சார்ந்த குழுவிற்குள்ளேயேதான் மணம்; செய்து கொள்ள வேண்டுமென்ற அகமணமுறையோ, வேற்றுக்குழுவினர்களுடன் தான் மணம் செய்து கொள்ள வேண்டுமென்ற புறமணக் கட்டுப்பாடுகளோ இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. நெய்தல் பாடல்களை நோக்கும்போது பெரும்பான்மையாக வேற்று ஊரினைச் சார்ந்த தலைவனுடன் மணமுறை நடைபெற்றிருக்க வாய்ப்பு உள்ளமையை அறியமுடிகிறது.

**அகமணமுறை**

பரதவ மக்களிடம் அகமண முறையில் திருமணம் செய்யும் வழக்கம் இருந்துள்ளது. இது சிறுபான்மையாகக் கருதப்படுகிறது. இவை பற்றிய செய்திகள் ஓரிரு பாடல்களில் மட்டுமே பதிவுசெய்யப்பெற்றுள்ளன. இதற்குச் சான்றாக,

**"இவளே கானல் நண்ணிய காமர் சிறுகுடி**
**………………………………………**
**இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ**
**புலவு நாறுதும் செலநின் றீமோ**
**பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை**
**நும்மொடு புரைவதோ அன்றே**
**எம்ம னோரில் செம்மலும் உடைத்தே"        (நற்.45)**

எனவரும் பாடலடிகள், தோழி நெய்தல் நிலத் தலைவனிடத்தில் எம்முடைய இனத்திலும் உம்மைப் போன்ற செல்வமிக்க ஆடவர்கள் இருக்கிறார்கள், ஆதலால் சுறாமீன் அறுத்து உணக்கல் வேண்டியிருக்கக்கூடிய தாழ்வான தொழிலினையுடைய எம் தலைவிக்கு நீ பொருத்தமானவன் அல்லன் என்று மறுத்துரைப்பதிலிருந்து, பொருளாதார நிலையில் ஒரே சீராக உள்ளவர்களுக்கிடையே மட்டும் திருமணம் நடைபெற்றுள்ளமையை தெளிவுறுத்திக் காட்டுகிறது. மேலும், 'எம்மனோரில் செம்மலும் உடைத்தே' என்பது அவர்கள் இனத்திற்குள்ளேயே அல்லது உறவினர்களுக்குள்ளேயே திருமணம் செய்யும் வழக்கம் இருந்தமையை வெளிக்காட்டுவதன் வாயிலாக இம்மக்களிடையே அகமணமுறை ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது.

**புறமண முறை**

புறமணம் என்பது வேற்றுக்குழுவினரோடு மணஉறவினை ஏற்படுத்திக் கொள்ளுதலாகும். நெய்தல் நிலத்தில் பெரும்பாலான மணஉறவுகள் இம்முறையின் வழி நிகழ்ந்தமையினைப் பற்றிப் பல பாடல்கள் பதிவு செய்துள்ளன. மேலும், இப்பாடல்கள் அனைத்தும் களவு வாழ்க்கை முடிந்து, கற்பு வாழ்க்கையில் நுழைந்தமையினைத் தெளிவுறுத்திக் காட்டுகின்றன. களவிற்குரியவர்களுள் தலைவி பரதவ, உமண இனத்தைச் சார்ந்தவர்களாகவும், தலைவன் வேற்றுக் குழுவினரைச் சார்ந்த ஆனால் அதே நிலத்தில் வாழ்பவனாகக் காட்டப்பெற்றுள்ளான். ஈங்கு தலைவன் கடற்கரைச் சோலையில் தலைவியைக் காண மணிகள் ஒலிக்கக் குதிரைகள் பூட்டிய தேரில் பாகன் ஓட்டிவர அவனது வருகை குறிக்கப்பெற்றுள்ளது. பகற்குறி, இரவுக்குறி ஆகிய இரு வேளைகளிலும் இவர்களுடைய சந்திப்பு நிகழ்கிறது. தலைவன் உறுதியாகக் கடலின் மேற்சென்று மீன்பிடித்து வரும் பரதவ இனத்தவன் அல்லன் என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது.

**"அன்னை வாழிவேண் டன்னை நம்மூர்ப்;**
**பலர்மடி பொழுதி னலமிகச் சாஅய்**
**நள்ளென வந்த வியறேர்ச்**
**செல்வக் கொண்கன் செல்வனஃ துரே" (ஐங்.104)**

என புதல்வற் பெற்றுழித் தலைமகன் மனைக்கண் சென்ற செவிலிக்கு, முன்பு அறத்தொடு நின்று வதுவை கூட்டிய தோழி அவர் ஊர் நன்மை காட்டிச் சொல்லியமையை அம்மூவனார் என்ற புலவர் பதிவு செய்துள்ளார். இதிலிருந்து தலைவன் பரதவ இனத்தவன் அல்லன் என்பது உறுதியாகிறது.

**விலை மணம்**

சங்க காலத்தில் தலைவன், தலைவியை வரைவு கொள்ள வேண்டுமாயின் தலைவியின் பெற்றோரிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை அல்லது பொருளைக் கொடுத்து மணம் புரிந்து கொள்ளும் வழக்கம் இருந்துள்ளது. இதனை 'விலைமணம்' என்றும் அழைத்துள்ளனர். இவ்வாறு கொடுக்கப்படும் அப்பொருளுக்கு 'முலைவிலை' என்றும் அழைக்கின்ற மரபு காணப்படுகிறது. இன்றைய காலகட்டங்களில் அது 'பரியம்' அல்லது 'பரிசம்' என்று அழைக்கப்படுகிறது.

**"கருங்கட் கோசர் நியம மாயினு**
**முறுமெனக் கொள்குந ரல்லர்**

**நறுநுத லரிவை பாசிழை விலையே" (அக.90)**

எனவரும் மருதனிளநாகனாரின் பாடலடிகள், தலைவியைத் திருமணம் செய்து அவளுடைய மார்பினைத் தழுவப்பெற வேண்டுமானால் இரும்பினாற் செய்யப்பட்ட வடுவுடைய முகத்தர் ஆகிய அஞ்சாமையுடைய கோசர் வாழும் நியமத்தை நீ தந்தாலும் போதும் என்று அவளுடைய பெற்றோர் ஏற்றுக் கொள்ளார். ஆகவே அவர்கள் நிறைவடையும் படியான பரிசத்துடன் வரைய முற்படு என்று தோழி தலைவனுக்கு அறிவுறுத்தும் தன்மையில் புனையப்பெற்றுள்ளது. மேலும், தலைவி உடுக்கும் தழைஆடைக்கு விலையாக ஒரு நாட்டையே நல்கிய நிலையும் காணப்படுகிறது. இதன்வழி பரதவ மக்களிடம் பெண்ணை மணம் முடிக்கக் குறிப்பிட்ட ஒரு தொகை வாங்கும் பழக்கம் இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

**பணிமணம்**

பணிமணம் என்பது திருமணம் செய்ய விரும்பும் தலைவன், திருமணத்திற்கு முன்பு தலைவியின் வீட்டிற்குச் சென்று, கூலி வாங்காமல் வேலை செய்ய வேண்டும். தலைவியின் பெற்றோர் அவன் செய்யும் வேலையின் தன்மையினைப் பொறுத்துத் திருமணம் செய்து கொடுக்க முன்வருவர். இவ்வாறு பெற்றோர் இசைந்து மணம் செய்து வைக்கும் முறை 'பணிமணம்' என்று அழைக்கப்படுகிறது.

**"நலஞ்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்**
**பெறலருங் குரையள் ஆயின் அறந்தெரிந்து**
**நாமுறை தேஎம் மரூஉப்பெயர்ந் தவனோடு**
**இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழந்தும்**
**பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்**
**படுத்தனம் பணிந்தனம் அடுத்தனம் இருப்பில்**
**தருகுவன் கொல்லோ தானே விரிதிரைக்**
**கண்திரள் முத்தங் கொண்டு ஞாங்கர்த்**
**தேனிமிர் தண்கரைப் பகுக்குங்**
**கானலம் பெருந்துறைப் பரதவர் எமக்கே"(அக.280)**

என்ற அம்மூவனாரின் பாடலடிகள், சிறந்த பொருளும், அணியும் பரிசாக நிறையக் கொடுப்பினும் தலைவி பெறுதற்கரியவள். ஆயின் அவ்வூருக்குச் சென்று அவள் தந்தையாகிய பரதவன் செய்யும் உப்புவிளைவித்தல் தொழிலும், புணையொடு உடன் சென்று அவன் வசமாய்ப் பணிந்து சார்ந்து இருப்பின் அறம் தெரிந்து தலைவியைத் தருகுவன் எனத் தலைவன் தன் நெஞ்சிற்கு மொழியும் நிலையில் அமைந்துள்ளது. இதிலிருந்து இச்சமூக மக்களிடம் பணிமணம் வழக்கில் இருந்தமையினை ஒருவாறு அறியமுடிகிறது. இதில் தந்தையின் இசைவு முதன்மைப்படுத்தப்படுவதையே மேற்கண்ட பாடல் உறுதிப்படுத்துகிறது.

**உடன்பாட்டு மணம்**

உடன்பாட்டு மணம் என்பது தலைவனும் தலைவியும் களவு கொண்டமையை அறிந்த

பெற்றோர் அவ்விருவருக்கும் மணம் செய்துவைக்க உடன்படுகின்ற முறைமையினைக் குறிப்பதாகும்.

**“துறைதொறும் பரக்குந் தூமணற் சேர்ப்பனை**
**யானுங் காதலென் யாயுநனி வெய்யள்**
**எந்தையுங் கொடீஇயர் வேண்டும்**
**அம்ப லூரு மவனொடு மொழியுமே” (குறு.51)**

என்ற குன்றியனாரின் பாடலடிகள், தலைவனுக்குத் தலைவியை மணம் முடிக்கத் தாயும் தந்தையும் விரும்புகின்ற நிகழ்வினை எடுத்து இயம்புகின்றன. இதேபோல் குறு.351-ஆம் பாடல் தலைவியின் சுற்றத்தார் அனைவரும் உரிமை செப்பிய இயல்பினை முன்னிறுத்திக் காட்டியுள்ளன. இவை போன்ற நிகழ்வுகள் பரதவ சமூக மக்களிடையே உடன்பாட்டு மணம் இருந்த நிலையினைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளன.

**உடன்போக்கு மணம்**

தோழியின் துணையோடு பெற்றோர் அறியாமல் களவில் காதல் கொண்டு வாழ்ந்த தலைவனும் தலைவியும் மேலும் களவு வாழ்க்கையைப் பெற்றோர் அறியாமல் தொடர்தல் இயலாது என்பதை உணருகிற வேளையில் கற்பு நெறிக்குக் கேடு நிகழா வகையில் உடன்போக்கு மேற்கொள்வர். அதேபோல் தலைவியின் களவினைப்; பெற்றோர் அறிந்த பின்பு அதற்கு உடன்படாத போது தோழியானவள் உடன்போக்கு சென்று மணம்; செய்து கொள்ள வழிவகை செய்வள். இந்த நிலைகளில் உடன்போக்கு என்பது திருமணத்தை முன்னிறுத்தித் தலைவி தான் வாழ்ந்த சூழ்நிலையை விட்டுத் தலைவனுடனே செல்லுதலையே குறிக்கும் வகையில் உள்ளன. இம்முறையும் நெய்தல் நிலத்தாரிடம் காணப்படுகிற தன்மையினை அறியமுடிகிறது. பெற்றோர் உடன்படாமையால், தலைவியின் நிலையினைப் புரிந்து கொண்ட தோழி தலைவனோடு உடன்போக்குச் செல்ல அறிவுறுத்தியமையினை,

**“நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு**
**செலவு அயர்ந்திசினால் யானே**
**அலர்சுமந்து ஒழிகஇவ் அழுங்கல் ஊரே” (நற்.149)**

என உலோச்சனார் மொழியும் பாடலடிகள், உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு உடன்போக்குச் சென்று மணம் முடித்து, புதல்வன் பெற்று வாழ்ந்தமையை ஐங்.104-ஆம் பாடலடிகள் புலப்படுத்தி நிற்கின்றன. இவ்வகை மணம் நெய்தல் நிலத் தலைவிக்கு வாழ்க்கைத் துணையைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்கிற உரிமையை நெய்தல் சமூகம் வழங்கியுள்ளமையை வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளன.

**மடலேறி மணம் புரிதல்**

மடலேறி மணம் புரிகின்ற பழக்கமும் இந்நெய்தல் நில மக்களிடம் காணப்பெற்றுள்ளது. இம்முறை சிறுபான்மையான நிலையில் நடைபெற்றுள்ளது. தலைவியின் வீட்டார் தலைவனுக்குப் பெண் கொடுத்து மணம் செய்துவைக்க மறுத்தபோது, தலைவன் மடல் ஏறியவழி, அவளின் தமர் அஞ்சி பெண்ணை மணம் முடித்துக் கொடுக்க உடன்பட்டமையினை,

**"வருந்தமா ஊர்ந்து மறுகின்கண் பாடத்**
**திருந்திழைக்கு ஒத்த கிளவிகேட் டாங்கே**
**பொருந்தாதார் போர்வல் வழுதிக்கு அருந்திறை**
**போலக் கொடுத்தார் தமர்" (கலி.141,21-25)**

எனவரும் பாடலடிகள், உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறாகப் பல நிலைகளில் இச்சமூகம் சார்ந்த மக்களிடையே மணம் நடைபெற்ற முறைகள் காணப்படுகிற தன்மையினைப் புலவர்கள் தங்களுடைய பாடல்களின் வாயிலாகப் பதிவு செய்துள்ளனர். இந்த நிலைகளில் காணும்போது நெய்தல் நிலச் சமூகத்தில் தலைவியின் திருமணத்தில் தாய், தந்தை, சுற்றத்தார் என அனைவருக்கும் பங்கு இருப்பினும், தந்தைக்கு முதன்மையான இடம் கொடுத்திருப்பது மேலும் ஆய்வதற்கான களனாக உள்ளது. மேலும், பணிமணம், விலைமணம் என்பவை தொடக்க காலகட்ட தாய்வழிச் சமூக நிலையினை உணர்த்துவதாகவும், மடலேறி மணம் புரிதல், பெற்றோர், சுற்றத்தார் இசைவைப் பெற்று மணம் செய்தல் போன்றவை அதற்கடுத்த காலகட்ட நிலைகளை வெளிக்காட்டுவதாக உள்ளன.

**நிறைவுரை**

பழக்கவழக்கமும் பண்பாடும் என்பதில் பரதவ இன மக்களிடம் காணப்படுகின்ற விருந்தோம்பல் பண்பு, விளக்கேற்றல், நோன்புநோற்றல், இல்லினை எழில்படுத்தல், ஈகைப்பண்பு, பகுக்கும் பண்பு, பழையன கழிதல், பௌர்ணமி நாளில் மீன்பிடிக்கச் செல்லாமை ஆகியன பற்றிய செய்திகள் முழுமையாக ஆராய்ந்து வெளிப்படுத்தப்பெற்றுள்ளன. இம்மக்களிடையே நடைமுறையில் இருந்த விழாக்கள் பற்றியும், விளையாட்டுக்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. விளையாட்டுக்கள் வழி வெளிப்படுகிற ஆடவர் மற்றும் மகளிரின் குணநலன்கள் மட்டுமன்றி அதன் வழி வெளிப்படுகிற இச்சமூகம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளையும் ஆய்ந்து வெளிக்கொணரப்பெற்றுள்ளன. மேலும், திருமணம் என்ற உறவு எந்தெந்த நிலைகளில் நெய்தல் நிலத்தில் நடைபெற்றது என்பதை புலப்படுத்தப்பெற்றுள்ளன. அகமணம், புறமணம் என்பதில் பெரும்பான்மையாக நடைமுறையில் இருந்த மணமுறை பற்றியும் அம்மணங்கள் நடைபெற்ற முறைமைகள் குறித்தும் ஆராய்ந்து தெளிவுபடுத்தப் பெற்றுள்ளன. மேற்கண்ட செய்திகள் வழி இந்நில மக்களின் வாழ்க்கையோடு சேர்ந்த பண்பாட்டுக் கூறுகளையும், அவற்றின் தனித் தன்மைகளையும் ஓரளவு அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளமை தெளிவு.